குளித்தலை மருத்துவமனை

* 243 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசினர் மருத்துவமனையில் மின் விசிறி வசதி எப்போது அமைக்கப்பட்டது ?

(இ) பழைய மின் விசிறிகளை மாற்றி அமைக்கவும், கூடுதலாக மின் விசிறி வசதி செய்து தரவும் அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1957 டிசம்பர் மாதம் குளித்தலை மருத்துவமனையை மாவட்ட மன்றத்திலிருந்து அரசு தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டபோது, இரு மின்விசிறி வசதியோடு இருந்தது. மேலும் ஒரு மின் விசிறி 8—11—1971-ல் மேற்படி மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ளது.

(இ) மூன்று மின்விசிறிகளில் ஒன்று பழுதடைந்திருந்தது. அந்த மின் விசிறியை செப்பனிடவும் மற்ற எல்லா மின் விசிறிகளும் நன்றாக இயங்கும்படி கவனித்துக்கொள்ளவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவ அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தற்பொழுது இந்த மருத்துவமனை அமைந்திருக்கிற இடம் நகரத்தின் நடுவிலே இருக்கிறது. ஆகவே, காற்றோட்ட வசதி போதுமானதாக இல்லை. இன்னும் கூடுதலாக மின் விசிறி வசதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பழைய கட்டடத்தில் நிறைய மின் விசிறிகளைப் பொருத்துவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஆனால், புதிய மருத்துவமனை கட்டுவதற்கு இடம் பெறுவதற்கு அரசு அண்மையில் அனுமதி வழங்கியிருக்கிறது. அதற்கான தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.

தஞ்சை மருத்துவமனை வெளி நோயாளிப் பிரிவுக்கான கட்டடம்

* 244 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் வெளி நோயாளிப் பிரிவுக்கான கட்டடம் கட்டப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.